## ஓ என் சமகாலத் தோழர்களே!

1. ‘என் சமகாலத் தோழர்களே’ கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
    - முன்னோர் கூறிய முதுமொழிகளை வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டும்.
    - பொறுமை, அடக்கம் என்னும் சுட்டுப்பாடுகளை மீறாதீர்கள்.
    - அறிவை மறந்து எந்த நிலையிலும் உணர்ச்சி வயப்படாதீர்கள்.
    - பழமையை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.
    - அறிவியல் என்னும் வாகனத்தில் ஆளும் தமிழை நிறுத்துங்கள்.
    - கரிகாலன் கட்டிய கல்லணை போன்று தமிழர்கள் உருவாக்கிய கண்டுபிடிப்புகளைக் கணினியில் ஏற்றுங்கள். ஏவும் அம்புபோல் ஏவும் திசைநோக்கி நடக்கும் அடிமைத்தனத்தை மாற்றுங்கள்.
    - ஏவுகணையில் தமிழை எழுதி எல்லாக் கோள்களிலும் ஏற்றுங்கள்.

2.கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

- எப்பொழுதும் பொறுமை, அடக்கம் என்னும் இரு பண்புகளை மறத்தல் கூடாது.
- கூட்டுப் புழுக்கள் பட்டுப்பூச்சிகளாய் மாறி மிளிரும்,
- அதுபோல், பொறுமை, அடக்கம் இரண்டும் உடைய இளைஞர்கள் பட்டுப்பூச்சிகள் மிளிர்வது போல, இவ்வுலகில் வெற்றியினை அடையலாம் எனக் கவிஞர் கூறுகிறார்.